அ.வ.எண்.247/2017 28.03.2022

வா.சா. 1 நாராயண சாமி

வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்பட்டார்.

எனக்கு என் தாத்தா பாட்டி பெயர் தெரியவில்லை என்றும் நான் எப்பொழுதும் கூட்டு குடும்பத்தில் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே 'பாகப்பிரவினை ஏற்பட்டுள்ளதால் நான் மீண்டும் பாகப்பிரிவினை கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினையில் எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் மட்டும் தான் பாகம் கேட்க முடியும் என்றும் நான் அனைத்து சொத்துக்களிலும் பாகம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாகம் எதுவும் கிடைக்க வேண்டுமென்றால் எனது அப்பாவிற்கு கிடைத்த பாகத்தில் தான் பாகம்கேட்க வேண்டுமென்றும் எனது அத்தைகளுக்கு பாகம் கிடைக்கக் கூடாதென்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானபத்திரத்தை பொறுத்து எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்காது என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை செய்தது தவறாக உள்ளது. 4வது பிரதிவாதிக்கு 5 முதல் 11 பிரதிவாதிகள் அவர்களுக்கு கிடைத்த பாக சொத்தை தான் கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றும் அதனால் அந்த கிரயப்பத்திரத்தை பொறுத்து நான் எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. கூட்டு குடும்ப சொத்துக்களை பொறுத்து நான் பாகம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவிற்கு குறைவாக தான் பாகம் கொடுத்துள்ளார்கள். தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.